செ.வெ.எண்:338 நாள்:27.05.2018

**திருநெல்வேலி பாளையங்கோட்டை மைய நூலகத்தில் மாதிரி இந்திய ஆட்சியப் பணி தேர்வில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷில்பா பிரபாகர் சத்தீஸ்,இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்கள்.**

-------

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மாவட்ட மைய நூலகத்தில் மாதிரி இந்திய ஆட்சியப் பணி தேர்வு இன்று (27.05.2018) நடைபெற்றது. இத்தேர்வில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷில்பா பிரபாகர் சத்தீஸ்,இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கி மாணவ, மாணவிகளுக்கு தேர்வுகள் குறித்த அறிவுரைகளை வழங்கினார்.

மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற மாதிரி இந்திய ஆட்சிப் பணி தேர்வில் 85 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இன்று இத்தேர்வு இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதற் கட்டமாக பொது அறிவும் இரண்டாம் கட்டமாக சிவில் சர்வீஸ் தேர்வும் நடைபெற்றது. இத் தேர்வுகள் சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் வினாத்தாள்கள் திருத்தப்பட்டு தேர்வில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை வழங்கி இந்திய ஆட்சிப் பணி தேர்வில் எவ்வாறு வெற்றி பெறுவது குறித்து கருத்துகளை தெரிவித்தார்கள். மேலும் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து அதிக அளவில் மாணவ, மாணவிகள் இந்திய ஆட்சிப் பணி தேர்வில் வெற்றிபெற வேண்டும் என தெரிவித்தார்கள். மாவட்ட மைய நூலகத்தில் பயிற்சி பெற்று தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் நடத்தும் குரூப்-2 மற்றும் குரூப் -4 தேர்வில் வெற்றிபெற்ற 3 மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகளை வழங்கினார்கள்.

முன்னதாக மாவட்ட மைய நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பார்வையேற்றோர்களுக்கான சிறப்பு பயிற்சி மையத்தில் எவ்வாறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது என்பதை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஷில்பா பிரபாகர் சத்தீஸ்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்

இந்நிகழ்ச்சியில் தூய யோவன் கல்லூரி முதல்வர் முனைவர் ஜான்கென்னடி, ஸ்மார்ட் லீடர் நிறுவாக இயக்குநர் திரு.சிவராஜ்வேல், மாவட்ட மைய நூலகர் முனைவர் முத்துகிருஷ்ணன், திரு.கணபதி சுப்பிரமணியன், திரு.அந்தோணி குருஸ் அடிகளார், திரு.பாலசுப்பிரமணியன், திரு.சங்கரன், திரு.முத்துசாமி, திரு.சரவணன், திரு.அருணாச்சலம், திரு.வெங்கடாச்சலம், மற்றும் அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.